ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

2019/2020

# வளர் தமிழ் 4

## பயிற்சி 3

பெயர் ______________________________

*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

உனது குடும்பத்தைப் பற்றி விவரித்துச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

தமிழர் வாழ்வில் தைப்பொங்கல் சிறந்த நாளாகும். இது ஆண்டு தோறும் தைமுதலாம் நாள் கொண்டாடப்படும். இந்நாள் தமிழருடைய புத்தாண்டு நாளுமாகும். தைப்பொங்கலன்று அதிகாலையில் எழுந்து நீராடிப் புத்தாடை அணிவர். முற்றத்தில் கோலமிடுவர். புதுப்பானையில் புத்தரிசியை இட்டுப் பொங்கல் பொங்குவர். அன்று வடை, மோதகம், போன்ற பண்ணியங்களும் முக்கனிகளும் சேர்த்துக் கதிரவனுக்குப் படைப்பர். பின்னர் பொங்கலை அயலவருக்கும் கொடுத்து உண்டு மகிழ்வர். தைப்பொங்கலன்று தமிழருடைய விருந்தோம்பற் பண்பு சிறந்து விளங்குகின்றது.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

3. **பின்வரும் சொற்களை தமிழில் எழுதுவோம்.**

- Music ____________________
- Country ____________________
- Television ____________________
- Fruit Juice ____________________
- Garden ____________________
- Drawings ____________________
- Neck ____________________
- Letter ____________________
- Friendship ____________________
- Finger ____________________
- Lake ____________________
- Picnic ____________________
- Earthquake ____________________
- Red ____________________
- River ____________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

**4. பொருத்தமான சொல்லியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்.**

- உன் அன்பு நண்பி வெண்ணிலா எழுதும் கடிதம்
- அன்பு நண்பி சுகன்யாவுக்கு
- நீ அங்கு நலமா
- ஒவ்வொருத்தரைப் பற்றி அறிவதற்கும் நான் மிகவும் ஆர்வமாக இருந்தேன்.
- என்றும் அன்புடன் உனது நண்பி
- எனக்குப் பக்கத்து நாற்காலியில் சுமதி எனும் ஒரு மாணவி அமர்ந்திருந்தாள்

______________________________ ,

____________________________________________________. நான் இங்கு நலமாக உள்ளேன். ______________________________? உன் பெற்றோர் எப்படி இருக்கின்றனர்? உன் கடிதம் கிடைத்தது.

நான் கடந்த வாரம்தான் தமிழ்ப் பள்ளிக்கூடம் போகத்தொடங்கினேன். முதல்நாள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருமே எனக்குப் பழக்கமில்லாத புதியவர்கள் என்பதால், ____________________________ ____________________________________________________________________________.

எல்லா மாணவர்களும் சரியான நேரத்திற்கு வகுப்புக்கு வந்திருந்தார்கள். எனது வகுப்பில், ________________________________________________________ ________________________________________________________________________. அவள் என்னுடைய வீட்டிலிருந்து ஐந்து நிமிட தூரத்தில் வசிக்கிறாள். அன்றைய வகுப்புகள் முடிந்ததும் நானும் அவளும் நிறைய நேரம் பேசிக்கொண்டிருந்தோம். இந்த நத்தார் விடுமுறையில் நீ எனது வீட்டுக்கு வந்தால் நான் உனக்கு சுமதியை அறிமுகப்படுத்துகிறேன். நாங்கள் மூவரும் இணைந்து வெளியே செல்லலாம்.

பதில் கடிதத்தில் நீ வரும் நாளைக் குறிப்பிட்டு எழுது.

____________________________

வெண்ணிலா

5. **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- பழமொழி: முயற்சி உடையார் ________________ அடையார்.
  (இகழ்ச்சி, புகழ்ச்சி, பகைமை)

- நாம் ________________ உள்ள பாடலைக் கேட்போம் .
  (ஒலிவட்டில், நாற்காலியில், கட்டிலில்)

- நான் நேற்றுப் பள்ளிக்குச் ________________.
  (செல்வேன், சென்றேன், செல்கிறேன்)

- பாடற்போட்டியை பிரித்து எழுதினால் ________________ .
  (பாடற்+போட்டி, பாடல்+போட்டி, பாட்டு+போட்டி)

- மா, பலா, வாழை ஆகியவை ____________________ ஆகும்.
  (முக்கனிகள், முக்கோணங்கள், இன்கலைகள்)

- 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________.
  (என்பது, என்வது, எண்பது)

- மயில் அகவும். அதுபோல் காகம் ________________ .
  (கூவும், கரையும், பேசும்)

- தமிழின் மொத்த எழுத்துகள் ________________ .
  (248, 247, 274)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

6. **தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

| | | |
|---|---|---|
| காய்கறிகள் | இன்றியமையாதது | நோய்கள் |
| சத்துள்ள | உணவு | உறுப்புகள் |

<u>உணவு</u>

உடல் வளர்ச்சிக்கு கட்டாயமாகத் தேவைப்படுவது ____________________. உடலை நோய் வராமல் காப்பதற்கும் உடலை நல்ல நிலையில் வைத்திருப்பதற்கும் ____________________ உணவு தேவை. நாம் உண்ணும் உணவில்____________________ , இறைச்சி, முட்டை, பால், பழங்கள் போன்றவற்றை அதிகம் சேர்க்க வேண்டும். இவை உடல் ____________________ சீராக இயங்கத் தேவையான வலுவைத் தருகின்றன. நாம் உடலுக்கு ஏற்ற உணவை அறிந்து உண்பதன் மூலம் ____________________ வராமல் தடுக்கலாம். உணவு மட்டுமன்றித் தூய்மையான நீரும் உடல் நலத்திற்கு____________________. நீர் உடல் வெப்பத்தைக் குறைப்பதோடு உணவு நன்றாகச் செரிப்பதற்கும் உதவுகின்றது

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 4

7. **படத்தைப் பார்த்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதவும்.**




ரெடிங் தமிழ் கல்விக்கூடம் வளர் தமிழ் 4